


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ நவம்பர். 24, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 50 ❖ ரூ.10

## கடந்த ஆட்சியில் சுகாதாரம், நெடுஞ்சாலை உள்ளிட்ட 4 துறைகளில் ஊழல்

# ரூ.1,000 கோடி!

## சட்டப்பேரவை பொதுக் கணக்குக்குழு தலைவர் செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு
## மதுரை இ.எஸ்.ஐ., மருத்துவமனையில் முறைகேடு: 4 பேர் மீது வழக்கு



புதுக்கோட்டை, நவ.24-

கடந்த ஆட்சியில் சுகாதாரத்துறை, நெடுஞ்சாலைத்துறை, உயர்கல்வித்துறை, நகராட்சி துறை உள்ளிட்ட துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்து உரிய ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

சட்டப்பேரவைபொது கணக்கு குழு தலைவர் செல்வப் பெருந்தகை தலைமையிலான சட்டமன்ற ஆய்வுக் குழுவினர் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நேற்று ஆய்வுகளை மேற்கொண்ட பின் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்ட பணிகள் குறித்த கணக்கு வழக்குகளை சரிபார்த்தனர்.

அதன் பின், செய்தியாளர்களை சந்தித்த சட்டப்பேரவை பொது கணக்கு குழுத் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியதாவது:

கடந்த ஆட்சியில் சுகாதாரத்துறையில் காலாவதியான மருத்து வாங்கியது. அதேபோல் நகராட்சி, நெடுஞ்சாலை, உயர்கல்வி உள்ளிட்ட துறைகளில் ஆயிரக்கணக்கான கோடி அளவில் ஊழல் நடந்துள்ளது ஆய்வில் தெரியவந்துள்ளது. அரசின் பணம் பெரிய அளவில் விரயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் மத்திய அரசிடம் இருந்து வரவேண்டிய ரூ-147.26 கோடி வராமல் போய்விட்டது.

மதுரை இ.எஸ்.ஐ., மருத்துவமனைக்கு கடந்த ஆட்சியில் மருந்துகள் வாங்கியதில் ரூ.27 கோடி முறையீடு நடந்துள்ளது. இது தொடர்பாக நால்வர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல், அண்ணா பல்கலைக்கழகத்தில் மார்க் லிஸ்ட் தயார் செய்வதில் ரூ.77 கோடி முறைகேடு நடந்துள்ளது ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

புதுக்கோட்டை உள்ளிட்ட ஏழு மாவட்ட விவசாயிகளின் கனவு திட்டமான காவிரி - குண்டாறு திட்டத்திற்கு கடந்த ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதி முறையாக பயன்படுத்தப்பட்டதா? அதில் ஏதும் முறைகேடு நடந்துள்ளதா? என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ள உள்ளோம். தொடர்ந்து இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யவும் புதுக்கோட்டை ராஜகோபாலத் தொண்டைமானுக்கு மணிமண்டபம் விழா கமிட்டியாளர்கள் விரும்பும் இடத்தில் அமைக்கவும் பரிந்துரை செய்வோம்.

நகராட்சி துறையில் கடந்த 2016-17ம் ஆண்டு பெரிய அளவில் முறைகேடு நடந்துள்ளது. புதுக்கோட்டையில் கடந்த ஆட்சியில் தனிநபர் ஒப்பந்ததாரர் ஒருவரின் வங்கிக் கணக்கிற்கு பெரிய அளவிலான பணம் அரசு பணம் சென்றுள்ளது குறித்தும் விசாரணை நடத்த உள்ளோம்.

அறந்தாங்கி நகராட்சியில் புதை சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக 2007ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டத்தை சரியாக கையாளவில்லை. 2018ம் ஆண்டில் கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் அறிவிக்கப்பட்டு ரூ.222 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பணிகள் முறையாக நடைபெறவில்லை. அரசு பணம் நஷ்டமானதாக தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இவ்வாறு செல்வப் பெருந்தகை கூறினார்.

ஆய்வின் போது, இந்த கூட்டத்தில் குழுவில் இடம் பிடித்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் காந்திராஜன், சரஸ்வதி, சிந்தனை செல்வன், சுதர்சனம், பூண்டி கலைவாணன், மாரிமுத்து, வேல்முருகன், சின்னத்துரை, மரகதம் குமாரவேல், சார்பு செயலாளர் பால சீனிவாசன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி மற்றும் அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, கொளத்தூர், தீட்டி தோட்டம் முதல் தெருவில் 1.27 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இறகு பந்து உள்விளையாட்டு அரங்குகளை திறந்து வைத்து விளையாடினார்.

## தி.மு.க., ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் லஞ்சம்
## எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை, நவ.24-

"தி.மு.க., ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது" என்று, ஆளுநரை சந்தித்து விட்டு வெளியே வந்த எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார்.

சென்னை கிண்டியில் உள்ள ராஜ்பவனில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியுடன் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று சந்தித்தார். அவருடன் முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், விஸ்வநாதன், முனுசாமி உடனிருந்தனர்.

ஆளுநர் சந்திப்பிற்கு பிறகு எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது:

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக ஆளுநரிடம் புகாரளித்தேன். தமிழகத்தில் உளவுத்துறை செயலிழந்து இருக்கிறது. உளவுத்துறை முன்கூட்டியே கண்டுபிடித்து இருந்தால் கோவை கார் வெடிப்பை தடுத்து இருக்கலாம். கோவை சம்பவத்தை தமிழக உளவுத்துறை சரியாக கையாளவில்லை. கள்ளக்குறிச்சி மாணவி மரணம் வழக்கை காவல்துறை முறையாக விசாரணை செய்யவில்லை.

பொம்மை முதல்வராக ஸ்டாலினும், திறமையற்ற அரசாக தமிழக அரசும் இருக்கிறது. நிர்வாக திறமையின்மை காரணமாக போதைப்பொருளை தமிழக அரசால் தடுக்க முடியவில்லை. அனைத்து துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. கமிஷன், கரப்ஷன், கலெக்ஷன் நிலவுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிராக தி.மு.க., அரசு செயல்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரத்தை இந்த அரசு பறித்துவிட்டது. அ.தி.மு.க., ஆட்சியில் மருந்து தட்டுப்பாடு இல்லாமல் இருந்த நிலையில் தி.மு.க., ஆட்சியில் தட்டுப்பாடு உள்ளது. நம்ம ஊரு சூப்பரு என்ற விளம்பர பேனர் விநியோகத்தில் முறைகேடு நடந்துள்ளது. ரூ.350 செலவாகும் பேனருக்கு ரூ.7,906 விலை நிர்ணயம் செய்து கணக்கு காட்டுகிறார்கள்.

தமிழகம் முழுவதும் டெண்டரே விடாமல் சட்டவிரோதமாக மதுபார்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதுபான கொள்முதலில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது. புகார்களை படித்துப்பார்த்த பிறகு உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

## அறந்தாங்கியில் சமுதாய வளைகாப்பு விழா கோலாகலம்!



அறந்தாங்கி, நவ.24-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடந்தது.

விழாவில், நாகுடி, சிலட்டூர், அத்தாணி, சிங்கவனம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் 500க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்கள் பங்கேற்ற நிலையில், அறந்தாங்கி வருவாய்கோட்டாட்சியர் சொர்ணராஜ் தலைமையில் வளைகாப்பு திருவிழா நடந்தது.

தமிழக அரசு சார்பில், கர்ப்பிணிகளின் தாயார் வீட்டில் வழங்கும் சீரைப்போல் சீர்வரிசை வழங்கப்பட்டது. வளைகாப்பில் கர்ப்பிணிகளுக்கு பெண் அலுவலர்கள் மாலை அணிவித்து சந்தனம், குங்குமம் கொடுத்து வளையல் அணிவித்து அட்சதை தூவி ஆசிர்வதித்தனர்.

இதில், பங்கேற்ற கர்ப்பிணிகளுக்கு அவர்களது உடல்களை பரிசோதித்துக்கொள்ள மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டது. கர்ப்ப காலங்களில் பெண்கள் உண்ணக்கூடிய உணவு வகைகள், அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வது? என்பது குறித்தும் கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது.

விழாவில், அறந்தாங்கி வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், துணை தாசில்தார் ராஜேஷ், வட்டார மருத்துவ அலுவலர் முகமது இத்ரீஸ் உள்ளிட்ட அதிகாரிகள், மக்கள் பங்கேற்றனர்.

## 5 மாவட்டங்களில் செயற்கை அருவிகள் உள்ள
## ரிசார்ட்டுகளுக்கு சீல் வைக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



மதுரை, நவ.24-

"இயற்கைஅருவிகளின் நீரோட்டத்தை மாற்றி செயற்கை அருவிகள் அமைப்பது சட்டவிரோதம், செயற்கை அருவிகள் இருக்கும் தனியார் ரிசார்ட்டுகளுக்கு சீல் வைக்க வேண்டும்" என 5 மாவட்ட ஆட்சியர்களுக்கு உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தை சேர்ந்த வினோத், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில்: "தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் மெயின் அருவி, பழைய குற்றால அருவி, தேனருவி, ஐந்தருவி செண்பகாதேவி அருவி, புலியருவி, சிற்றருவி, பழத்தோட்ட அருவி ஆகியன இயற்கையான அருவிகளாகும். சீசன் காலங்களில் குற்றால அருவிகளில் குளிக்க தமிழகம் முழுவதும் இருந்து மக்கள் அதிகளவில் வருவது வழக்கம்.

இதையடுத்து வணிக ரீதியில் மக்களை ஈர்க்க குற்றாலம் சுற்றுவட்டார பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் ரிசார்ட்டுகளில் செயற்கையாக அருவிகளை உருவாக்கி இணையதளங்களில் விளம்பரம் செய்து பணம் சம்பாதிக்கின்றனர். அவர்கள் இயற்கையான அருவிகளின் நீர்வழிப் பாதையை மாற்றி செயற்கையான அருவிகளுக்கு தண்ணீர் கொண்டுச்செல்கின்றனர். இதனால் இயற்கை சமநிலை பாதிக்கப்படுகிறது. எனவே, குற்றால அருவிகளின் இயற்கை நீரோட்டத்தை மாற்றி செயற்கை அருவிகளை உருவாக்குவோர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ.சத்ய நாராயண பிரசாத் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், செயற்கை அருவிகளின் புகைப்படங்கள், இணையதள முகவரிகள் நீதிபதிகளிடம் வழங்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள் அளித்த உத்தரவில்: "இயற்கை அருவிகளின், நீரோட்டத்தை மாற்றி செயற்கையாக அருவிகளை உருவாக்குவது முற்றிலும் சட்டவிரோதமானது. இது தொடர்பாக தென்காசி, நெல்லை, குமரி, கோவை, நீலகிரி மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் குழு அமைக்க வேண்டும். இக்குழு தனியார் ரிசார்ட்டுகளில் வணிக நோக்கத்தில் செயற்கையாக அருவிகள் உருவாக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும். செயற்கை அருவிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டால் ரிசார்ட் நடத்துவோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்து, ரிசார்ட்டுகளுக்கு சீல் வைக்க வேண்டும். இக்குழு செயற்கை அருவிகள் தொடர்பாக ஒரு வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என உத்தரவிட்டதுடன், வழக்கு விசாரணையை டிசம்பர் 1-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## அறந்தாங்கி செலக்சன் மெட்ரிக்., பள்ளியில் அறிவியல் கண்காட்சி



அறந்தாங்கி, நவ.24-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி செலக்சன் மெட்ரிக்., மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் திறனை மேம்படுத்த, நடத்தப்பட்ட அறிவியல் கண்காட்சி நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்களால் சுமார் 250 அறிவியல் படைப்புகள் தயாரிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பள்ளி தாளாளர் கண்ணையன் தலைமை ஏற்க அறந்தாங்கி காவல்துறை ஆய்வாளர் பிரேம்குமார் கண்காட்சியை துவக்கி வைத்தார்.

மேலும், நிகழ்வில் காவல் உதவி ஆய்வாளர் சாமிக்கண்ணு, அறந்தாங்கி ரோட்டரி சங்க தலைவர் பிரேம்குமார், நகர்மன்ற உறுப்பினரும், வருங்கால ரோட்டரி தலைவருமான செந்தில்குமார், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் வீராசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.


குழந்தைகளின் அறிவியல் படைப்புகளை பெற்றோர்கள் ஆர்வமாக பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர். முன்னதாக அனைவரையும் பள்ளி முதல்வர் சுரேஷ்குமார் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் செய்திருந்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,885 | Rs.5,287 |

## திருவண்ணாமலையில் டிச.,6ல் கார்த்திகை தீப விழா பக்தர்களுக்கு சிறப்பு பஸ்கள் ஏற்பாடு, பாதுகாப்பு தீவிரம்!

தி.மலை, நவ.24-

திருவண்ணா மலையில் கார்த்திகை தீபம் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் தீபத்தைக் காண லட்சக்கணக்கானோர் வருவார்கள். கொரோனா பாதிப்பால் கடந்த 2 ஆண்டாக கார்த்திகை தீபம் நடைபெறவில்லை.

இந்தாண்டு டிசம்பர் 6ம் தேதி கார்த்திகை தீபம் கொண்டாடப்படுகிறது. 7ம் தேதி பவுர்ணமியாகும். 2 சிறப்பு நாட்கள் தொடர்ந்து வருவதால் லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்குச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

டிச.,6ம் தேதி காலை 6 மணிக்கு பரணி தீபமும், மாலை 6 மணிக்கு மகா



தீபமும் ஏற்றப்படுகிறது. மகா தீபம் ஏற்றப்படுவதை பார்க்க மக்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து பஸ், கார், வேன் போன்றவற்றில் செல்வார்கள்.

இந்தாண்டு பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் விரிவான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது. மேலும், திருவண்ணாமலைக்கு பக்தர்கள் சென்று வர வசதியாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகின்றன.

சென்னை கோயம்பேடு, தாம்பரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், புதுச்சேரி, வேலூர், ஆரணி, செஞ்சி, திருப்பத்தூர், சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, கடலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து 3,000 சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளன.

சிறப்பு பஸ்கள் டிசம்பர் 6 மற்றும் 7ம் தேதி ஆகிய நாட்களில் இயக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளை போக்குவரத்து கழக அதிகாரிகள் செய்து வருகின்றனர். அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நிகழாமல் இருக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுளுக்கு தற்போதே போலீஸார் தயாராகி வருகின்றனர்.

## மயிலாடுதுறை மழை நிவாரணம்: ரூ.16 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, நவ.24-

மயிலாடுதுறை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.1,000 வழங்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதற்காக ரூ.16 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக மாநிலம் முழுவதும் கடந்த 11 மற்றும் 12-ம் தேதிகளில் கனமழை பெய்தது. குறிப்பாக, மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி, பூம்புகார், சீர்காழி, கொள்ளிடம் உள்ளிட்ட பகுதிகளில் மிக கனமழை பெய்தது. சீர்காழியில் 122 ஆண்டுகளில் இல்லாத வகையில், 44 செ.மீ. மழை பதிவானது.

இதனால், மயிலாடுதுறை, சீர்காழி, செம்பனார்கோவில் பகுதிகளில் மட்டும் 50 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள்



நீரில் மூழ்கின. கடலூர், மயிலாடுதுறை உள்ளிட்ட 21 மாவட்டங்களில் 40 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் பயிர்கள் நீரில் மூழ்கின. மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் குடியிருப்புப் பகுதிகளுக்குள் மழை நீர் புகுந்ததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

மழையால் பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் நேரில் ஆய்வு செய்த முதல்வர் ஸ்டாலின், நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும், சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்களில் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக குடும்ப அட்டைதாரர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும், கடும்மழையால் சேதமடைந்த பயிர்கள் குறித்து முறையாக கணக்கெடுப்பு செய்யப்பட்டு, உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா ரூ.1,000 வழங்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. சீர்காழியில் 99,518 குடும்ப அட்டைதாரர்களுக்கும், தரங்கம்பாடியில் 62,129 குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ரூ.1,000 வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகை இன்று நவ.24ம் தேதி முதல் வழங்கப்படும் என தெரிகிறது.




## கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பழுது 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு

திருநெல்வேலி, நவ.24-

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்ய நாட்டு உதவியுடன் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் 2-வது அணு உலையில் உள்ள டர்பைன் இயந்திரத்தில் நேற்று காலை திடீரென்று தொழில்நுட்ப கோளாறால் பழுது ஏற்பட்டது. இதையடுத்து அந்த அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அணு உலை இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இன்னும் ஓரிரு நாட்களில்



டர்பைனில் ஏற்பட்ட பழுதை சரி செய்த பின்னர் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்படும் என்று அணுமின் நிலைய வட்டாரம் தெரிவித்துள்ளது.

2-வது அணு உலையில் உள்ள இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. முதலாவது அணு உலையில் தற்போது 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது. இதனால் தொடர்ந்து மின்சாரம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் தி.மு.க., பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

சென்னை, நவ.24-

தி.மு.க.,வின் 15வது உட்கட்சித் தேர்தல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அக்கட்சியின் இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்று பொதுச்செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தி.மு.க., பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இளைஞர் அணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின், மகளிர் அணித் தலைவராக விஜயா



தாயன்பன், மகளிர் அணி செயலாளராக ஹெலன் டேவிட்சன் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர். இளைஞர் அணி துணைச் செயலாளர்கள், மகளிர் அணி செயலாளர், இணை செயலாளர், துணை செயலாளர்கள், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர்கள், மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர்கள், மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்கள் மற்றும் மகளிர் ஆலோசனைக் குழு பொறுப்பாளர்கள் ஆகியோரின்பெயர்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

தி.மு.க., இளைஞர் அணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் கடந்த 2019ம் ஆண்டு ஜூலை 4ம் தேதி தேர்வு செய்யப்பட்டார். தற்போது இரண்டாவது முறையாக அவர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து, அவருக்கு கட்சியின் முக்கிய தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## மின்சார பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம்

தென்காசி, நவ.24-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கடையநல்லூர் கோட்டம் சார்பாக மின்சார பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் நேற்று புளியங்குடியில் நடந்தது.

கடையநல்லூர் மின்வாரிய செயற்பொறியாளர் பிரேமலதா, களப்பணியாளர்கள் பாதுகாப்பாக கவனமுடன் பணிபுரிவதற்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினார். நிகழ்ச்சியில்



திருநெல்வேலி மண்டல பாதுகாப்பு அதிகாரிபேச்சிமுத்து, மின் விபத்துக்கள் நடந்த விதம் அதை தவிர்த்து இருக்க வேண்டிய வழிமுறைகளை காணொலி மூலம் கோட்ட களப்பணியாளர்களுக்கு எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர்கள் பூபாலன், முத்தையா, முத்துக்குமார், சின்னத்துரை, தொ.மு.சா. கடையநல்லூர் மற்றும்உதவிபொறியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் பலர் பங்கேற்றனர்.

## புதுகை அரசு ஐ.டி.ஐ.,ல் செயல்முறை பயிற்சி முகாம்

புதுக்கோட்டை, நவ.24-

சென்னை ஹோண்டா இந்தியா பவர் ப்ராடக்ட் லிமிடெட், புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் இணைந்து செயல்முறை பயிற்சி முகாம் முதல்வர் ராமர் வழிகாட்டுதலின் படி பயிற்சி அலுவலர் மனோகரன் தலைமையில் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

அனைவரையும் துணைப் பயிற்சி அலுவலர் யோகச்சந்திரன் வரவேற்றார். துணைப் பயிற்சி அலுவலர் சௌந்தராஜன், இணை பயிற்சி அலுவலர் ரமேஷ் முன்னிலை வகித்தனர்.



புதுக்கோட்டை கே.பி. அண்டு கோ ஹோண்டா விற்பனையாளர் அசோகன், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க தலைவர் மோகன் ராஜா, சர்வீஸ் இன்ஜினியர் ஸ்ரீராம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.

பயிற்சி முகாமில், துணைப் பயிற்சி அலுவலர் காத்தலிங்கம், இணைப் பயிற்சி அலுவலர் அன்பரசன் மற்றும் பயிற்சி அலுவலர்கள், மாணவர்கள் பங்கேற்றனர். முகாமில், காணொலி பயிற்சி மற்றும் செயல்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

## செந்துறை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மாவட்டத்தில் முதலிடம் பிடித்தது

அரியலூர், நவ.24-

செந்துறை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்துக்கு கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டம், செந்துறைபால்உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், நாள் ஒன்றுக்கு 24 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

மாவட்ட அளவில் சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கான முதலிடம் பெற்ற, செந்துறை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு, முதல் பரிசுக்கான கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

அரியலூரில் நடைபெற்ற கூட்டுறவு சங்க வார நிறைவு



விழாவில், இதற்கான பரிசினை சங்க செயலாளர் கொளஞ்சிநாதனிடம், போக்குவரத்துதுறை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரமண சரஸ்வதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## மாநில அளவிலான விளையாட்டு போட்டிக்கு தேர்வான மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாராட்டு

கள்ளக்குறிச்சி, நவ.24-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள குறு மையங்களான உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், சின்னசேலம், சங்கராபுரம் ஆகிய இடங்களில் குறுமைய அளவில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று, மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் நடந்தது.

இதில், உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 19 வயதுக்குட்பட்டோர், டேபிள் டென்னிஸ் மற்றும் ஸ்குவாஷ் ஆகிய போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தில் வெற்றி பெற்று மூன்று தங்கப் பதக்கங்களையும், 14, 17



வயதுக்குட்பட்ட இரட்டையர் பிரிவில் முதலிடம் பிடித்து தலா நான்கு பதக்கங்களையும் வென்றனர்.

மேலும், சிலம்பப் போட்டி, கேரம், ஜிம்னாஸ்டிக், ஹாக்கி ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்று, மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள மாணவர்கள் தேர்வு பெற்றனர்.

உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராமச்சந்திரன், உதவி தலைமை ஆசிரியர் கோவிந்தன், இருபால் ஆசிரியர்கள் மோகன்ராம், பிரேமா, சங்கர், பாண்டியன், செல்வி, ரமேஷ், உடற்கல்வி ஆசிரியர்கள் நாகராஜன், சிவ.ஈஸ்வரன், ஆனந்த எழிலரசன் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பாராட்டி, வாழ்த்து தெரிவித்தனர்.

## புளியங்குடி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்: ஆட்சியர்

தென்காசி, நவ.24-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் தி.மு.க., நகரச் செயலாளர் அந்தோணிசாமி தலைமையில் புளியங்குடி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளுக்கும் கிராம நிர்வாக அலுவலகங்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களில் உதவித்தொகை பெற சிறப்பு முகாம் நடந்தது.

முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்க்கன்னி உதவித் தொகை, கணவரால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரண உதவித்



தொகை, மற்றும் நலிந்தோர் நலத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை, பெறுவதற்குரிய சிறப்பு முகாம் நடைபெற்றது.

முகாமில், நலத்திட்ட உதவித் தொகை பெற விரும்பும் மக்கள், கிராம நிர்வாக அலுவலரிடம் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்து பயன்பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், நகர அவைத் தலைவர் வேலுச்சாமி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், அருணா தேவி, கார்த்திக், வள்ளி அண்ணாமலை, வீரமணி, ராஜேஸ்வரி, தவமணி, ஆறுமுகம், சுப்பு, கணேசன், பேச்சிமுத்து, கருப்பையா, பொன்னுதுரைச்சி, சக்தி ஐயப்பன், மணிமாறன், ராஜ் மீனா, பழனி, திரவியம், வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டு அனைத்து வார்டில் உள்ள மக்களையும் முதல்வரின் உதவித்தொகை பெற அழைத்துச் சென்றனர்.

## அரியலூரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்த விழிப்புணர்வு பேரணி



அரியலூர், நவ.24-

அரியலூர் மாவட்டத்தில் தேர்தல் பிரிவின் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் தொடர்பான விழிப்புணர்வு பேரணியை அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்திலிருந்து ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பேரணியில் 18-வயது பூர்த்தியானவரா, இன்றே வாக்காளராக பதிவு செய்வீர், வாக்காளர் பட்டியலில் முகவரி மாற்றத்திற்கு படிவம் 8-ஏ, வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கு படிவம் 8 என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி 100க்கும் மேற்பட்ட அரியலூர் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவிகள் பேரணியாக சென்றனர். அரியலூர் உழவர் சந்தை வழியாக அரியலூர் பேருந்து நிலையம் வரை சென்று பேரணி முடிவுற்றது.

பேரணியில், அரியலூர் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பூங்கோதை, வட்டாட்சியர்கள் வேல்முருகன் (தேர்தல் பிரிவு), கண்ணன் (அரியலூர்) மற்றும் தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், வருவாய்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



▶ வேலூர் அணைகட்டு சட்டமன்ற தொகுதி, அகமேடு ஊராட்சியில் அங்கன்வாடி கட்டிடம் கட்ட தி.மு.க., மாவட்ட செயலாளரும், அணைகட்டு எம்.எல்.ஏ.,வுமான நந்தகுமார் பூமி பூஜை செய்து பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தி.மு.க., நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வேலூர் அணைக்கட்டில் தி.மு.க., இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்

வேலூர், நவ.24-

வேலூர் மாவட்டம், அணைகட்டு தாலுகா, தி.மு.க., மாவட்ட செயலாளரும், அணைகட்டு எம்.எல்.ஏ.,வுமான நந்தகுமார் ஆலோசனைப்படி, அணைகட்டு தி.மு.க., மேற்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட ஊராட்சி திட்ட குழு தலைவருமான பாபு தலைமையில், தி.மு.க., இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக்



கூட்டத்தில், அணைக்கட்டு மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் குமாரபாண்டியன், ஒன்றிய சேர்மன் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பிரகாஷ், அவைத் தலைவர் மணிமாறன், பேரூர் செயலாளர் ஜாகீர் உசேன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் கார்த்தி, சிவானந்தம், கண்ணன், ஒன்றிய கவுன்சிலர்கள் தி.மு.க., நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# காரைக்காலில் பண்பாட்டு இணக்க நாள் விழா மாணவர்களுக்கு துணை ஆட்சியர் அறிவுரை



காரைக்கால், நவ.24-

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஒருமைப்பாட்டு வாரமாக காரைக்காலில் கொண்டாடப்படுவதின் ஒரு பகுதியாக 5ம் நாளான நேற்று கோவிந்தசாமி பிள்ளை அரசு உயர்நிலைப் பள்ளியில் கல்வித்துறை சார்பில், "பண்பாட்டு இணக்க நாள் விழா" நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு துணை ஆட்சியர் (வருவாய்) ஆதர்ஷ் தலைமை வகித்தார். மேல்நிலைக் கல்வித்துணை இயக்குனர் ராஜேஸ்வரி மற்றும் முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் உள்ளிட்ட அதிகாரிகள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

துணை மாவட்ட ஆட்சியர் ஆதர்ஷ் பேசியதாவது:

இந்தியாவில் பல்வேறு மதங்கள், மொழிகள் இருந்தாலும், நாம் அனைவரும் இந்தியர் என்ற ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறோம். மொழியாலும், மதத்தாலும் நமக்குள் பிரிவினை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக மாணவர்களாகிய நீங்கள் தான் இதற்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும்.

நீங்கள் படிப்பில் அக்கறை காட்டுவது போன்று, கலை நிகழ்ச்சிகளிலும், விளையாட்டிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்றும் தினமும் நாளிதழ்களை படிக்க வேண்டும். ஒரு ஆங்கில நாளிதழை தவறாமல் படிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பல்வேறு மாநிலங்களில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் இருப்பதை நினைவு கூறும் விதமாக பல்வேறு பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# ஈரோடு ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள் தற்செயல் விடுப்பு எடுத்து திடீர் போராட்டம்



ஈரோடு,நவ.24-

ஈரோடு ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள் ஆய்வு கூட்டங்கள் நடத்தக்கூடாது. விடுமுறை நாட்களில் ஆய்வு பணிகள் உயர் அலுவலர்களால் நடத்தப்படுவதை கைவிட வேண்டும். தமிழகம் முழுவதும் ஊராட்சி செயலர் முதல் உதவி இயக்குநர் நிலைவரை 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. அந்த காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் உள்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் அலுவலகம், மொடக்குறிச்சி, ஈரோடு, கொடுமுடி, பெருந்துறை உள்ளிட்ட 14 ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 732 பேர் தற்செயல் விடுப்பு எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தினால் 100 நாள் வேலைதிட்டம், பிரதமர் வீடுகட்டும் திட்டம் உட்பட மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தும் அனைத்துத் திட்ட பணிகளும் பாதிப்படைந்தது. ஊழியர்கள் தற்செயல் விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் பணியாளர்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது. கோரிக்கைகளை அரசு நிறைவேற்றவில்லை என்றால் டிசம்பர் 14ம் தேதி முதல் கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடப்போகிறோம் என்று நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# மின்னணு தேசிய வேளாண் சந்தையில் விவசாய பொருள் விற்பனை விவசாயிகளுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்



கள்ளக்குறிச்சி, நவ,24-

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்டத்தில் மாவட்ட விற்பனைக்குழு காட்டுப்பாட்டில் இயங்கும் உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சங்கராபுரம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் முறையே 2017ம் ஆண்டு நவம்பர் 15ம் தேதி, 2018ம் ஆண்டு மார்ச் 21, 2020ம் ஆண்டு ஏப்ரல் 29 முதல் மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது சின்னசேலம் மற்றும்மணலூர்பேட்டைஆகிய விற்பனைக்கூடங்களிலும் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு 2016ம் ஆண்டில் மத்திய அரசால் மின்னணுதேசிய வேளாண் சந்தை திட்டம் கொண்டு வரப்பட்டது. இதில் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஆன்லைன் மூலமாக தேசிய அளவிலான சந்தையில் விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படுகிறது. வேளாண் விளைபொருள் வர்த்தகத்தில் வெளிப்படை தன்மையை உறுதிபடுத்துவதும், அதிக அளவிலான சந்தைகளை அணுக வாய்ப்பு ஏற்படுத்தி தருவதும், அதிக அளவிலான வணிகர்களை கொள்முதலில் பங்கேற்க செய்வதும் விரைவாக மின்னணுவேளாண்சந்தைதிட்டம் மூலம் பணபட்டுவாடா செய்யப்படுவதும் மின்னணு தேசிய வேளாண் சந்தை ஆன்லைன் பரிவர்த்தனையின் சிறப்பம்சமாகும். தமிழ்நாட்டில் 127 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு தேசியவேளாண் சந்தை திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வரத்து வரப்பெறும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஒரே நேரத்தில் ஆன்லைன் மூலம் மறைமுக ஏலம் நடத்தப்பட்டுவியாபாரிகள் தங்களின் கைபேசி மூலம் விலை நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதிக போட்டி ஏற்பட்டு விவசாயிகளுக்கு நல்லவிலை கிடைக்க வாய்ப்புண்டு.

ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் பெற்றுள்ள வணிகர்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம் விற்று பயனடையலாம். வியாபாரிகள் 100 சதவீதம் மின்னணு தேசிய வேளாண் சந்தை லைவ் டிரேடிங் முறையினை செயல்படுத்திட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவண்குமார் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் 5 வகை பாக்டீரியாவால் 6.8 லட்சம் பேர் உயிரிழப்பு

## தி லான்செட் ஆய்வில் அதிர்ச்சி தகவல்

*புதுடெல்லி, நவ.24-*

*இந்தியாவில் 2019ம் ஆண்டில் 5 வகை பாக்டீரியாவால் 6.8 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று தி லான்செட் இதழின் ஆய்வறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.*

*தி லான்செட் என்ற மருத்துவ இதழில் ஒரு ஆய்வறிக்கை வெளியாகி உள்ளது. அதில் கூறியிருப்பதாவது: கடந்த 2019ம் ஆண்டில் சர்வதேச அளவில் இஸ்கெமிக் இதய நோய்க்கு அடுத்தபடியாக மனித உயிரிழப்புக்கு பாக்டீரியா தொற்று 2வது முக்கிய காரணமாக இருந்துள்ளது. உலகம் முழுவதும் அந்த ஆண்டில் 33 வகை பாக்டீரியா தொற்றால் பாதிக்கப்பட்டோரில் 77 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.*

*இதில், பாதிக்கும் மேற்பட்டோரின் உயிரிழப்புக்கு 5 பாக்டீரியாக்கள் மட்டுமே காரணமாக இருந்துள்ளன. அதேநேரம் உயிர்க்கொல்லி பாக்டீரியாக்கள் மற்றும் தொற்று வகைகள், இடம் மற்றும் வயதுக்கேற்ப மாறுபட்டுள்ளன.*

*இந்தியாவை பொருத்தவரை 2019ல் இ-கோலி, எஸ்.நுமோனியா, கே.நிமோனியா, எஸ். அவ்ரூஸ் மற்றும் ஏ.பவ்மானி ஆகிய 5 கொடிய பாக்டீரியாவால் 6 லட்சத்து, 78 ஆயிரத்து, 846 பேர் உயிரிழந்துள்ளனர். இதில், அதிகபட்சமாக இ-கோலி பாக்டீரியாவால் மட்டும் 1.57 லட்சம் பேர் உயிரிழந்தனர்.*

*எனவே, பாக்டீரியா தொற்று மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த சுகாதார கட்டமைப்பை பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, நோய்களைக் கண்டறியும் ஆய்வகங்களை அதிகப்படுத்துவது, தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவதற்கான விதிமுறைகளை அமல்படுத்துவது, நோய் எதிர்ப்பு மருந்து பயன்பாட்டை மேம்படுத்துவதுஉள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தி லான்செட் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், வெள்ளையம்பட்டி கிராமத்தில், மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.அனீஸ் சேகர் தலைமையில் அமைச்சர் பி.மூர்த்தி நேற்று அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், உதவி ஆட்சியர் (பயிர்சி) திவான்சு நிகம், மதுரை வருவாய் கோட்டாட்சியர் சுகி.பிரேமலா ஆகியோர் உடன் உள்ளனர்.



வேலூர் மாவட்டம், அணைகட்டு சட்டமன்ற தொகுதி, அகமேடு ஊராட்சியில் 100 நாள் வேலை திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் குறைகளை எம்.எல்.ஏ., நந்தகுமார் கேட்டறிந்தார். தி.மு.க., நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தெற்கு ஒன்றியம் பெரம்பூர் ஊராட்சியில் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் வீடு தீயினால் முழுமையாக சேதமடைந்ததால் அ.தி.மு.க., மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் நேரில் சென்று ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் முரளி மற்றும் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# ஒகேனக்கலுக்கு நீர்வரத்து 14,000 கனஅடியானது குவியும் சுற்றுலாப்பயணிகள், ஐயப்ப பக்தர்கள்



ஒகேனக்கல், நவ.24-

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு நீர்வரத்து அதிகரிப்பால் கொட்டும் அருவியில் சுற்றுலாப்பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் குவிந்து வருகின்றனர்.

கர்நாடகமாநில நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து உபரிநீர் தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

இதனால் நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 9,500 கன அடி தண்ணீர் வந்தது. இந்நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்துள்ளது. இதன் காரணமாக இன்று காலை 6 மணி நிலவரப்படி நீர்வரத்து 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து வந்தது.

மெயின் அருவி, சினிபால்ஸ், ஐவர்பாணி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதையடுத்து வழக்கம் போல் வரும் சுற்றுலா பயணிகளை விட தற்போது அதிகமானோர் வந்து அருவியில் குளித்து மகிழ்கின்றனர். ஐயப்பன் கோவிலுக்குச் செல்வோர் இங்கு வந்து ஆனந்தந்தமாக குளித்து மகிழ்கின்றனர்.

ஒகேனக்கல் நீர் வீழ்ச்சிக்கு நீர் வருகை அதிகரிப்பால், தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறையினர் நீர்வரத்தை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# அரியலூரில் நாளை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஆட்சியர் அழைப்பு

*அரியலூர், நவ.24-*

*அரியலூர் மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பின்றி காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திதரும்பொருட்டு ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் வெள்ளிக்கிழமை சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது.*

*இது குறித்து அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:*

*தற்போது வரும் 25ம்தேதி அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தில் நடைபெறவுள்ள சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் முன்னணி தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் திறன்பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான ஆட்களை தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்ய உள்ளனர்.*

*எனவே, இம்முகாமில் கலந்து கொள்வதற்கு 18 வயதுமுதல்35வரையிலான ஐ.டி.ஐ., டிப்ளமோ மற்றும் பட்டப்படிப்பு படித்த இளைஞர்கள் பங்கேற்கலாம். முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களின் வேலைவாய்ப்புபதிவுரத்து செய்யப்படமாட்டாது.*

*மேலும், விவரங்களுக்கு 04329 228641என்றதொலைபேசி எண்ணையும் அல்லது ariyalurjobfair@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையும் தொடர்பு கொள்ளலாம். இந்த வாய்ப்பினை அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# ஆரணியில் சாய்பாபா ஜெயந்தி விழா ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி ஏற்பாடு



**ஊத்துக்கோட்டை, நவ.24-**

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி சுப்பிரமணிய நகர் பகுதியில் ஸ்ரீ சத்யசாய் சேவா சமிதியின் ஸ்ரீ சத்திய சாயி சேவா மந்திரம் கோவில் உள்ளது. இக்கோவிலில், பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 97-வது ஜெயந்தி விழா நேற்று நடைபெற்றது.

இதை முன்னிட்டு நேற்று விடியற்காலை ஓம்காரம், சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனம், பிரசாந்தி கொடியேற்றுதல், சேவாதள் பணிகள், பாதுகாபிஷேகம் உள்ளிட்டவை நடைபெற்றது. நேற்று மதியம் நாராயண சேவை எனப்படும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்னர், பூக்களாலும், மின்விளக்குகளாலும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா திருஉருவப்படம் அலங்காரம் நடைபெற்றது. பின்னர், ஸ்ரீ சத்ய சாயி பஜனையுடன் சுவாமி முக்கிய வீதிகளின் வழியாக திருவிதி உலா வரும் நிகழ்ச்சி, இரவு மகாமங்கள ஆரத்தி நடைபெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீ சத்திய சாயி சேவா சமிதி கன்வினர் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# அசிக்காடு பஞ்., யூனியன் நடுநிலைப்பள்ளிக்கு வந்த மயிலாடுதுறை ஆட்சியரை வரவேற்ற பள்ளி மாணவி



மயிலாடுதுறை, நவ.24-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், அசிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு வந்த மாவட்ட ஆட்சித்தலைவர் லலிதாவை, பள்ளி மாணவி வர்ஷினி வாழ்த்துரையுடன் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்றார்.

பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் சீதாலெட்சுமி, பள்ளி அடிப்படை கட்டமைப்பிற்கு தேவையான கோரிக்கை மனுவினை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினார். மாவட்ட ஆட்சியரோடு வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மக்கள் பள்ளியை பார்வையிட்டனர்.

மாவட்ட ஆட்சியர் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடி பள்ளிக் கட்டிட நிலை, அங்கன்வாடி மையம், சத்துணவு சமைக்கும் அறை மற்றும் பள்ளி அருகில் இடிக்க வேண்டிய நிலையில் உள்ள அங்காடி கட்டிடம், பொது சுகாதாரக் கழிப்பறை கட்டிடம் போன்றவற்றை ஆய்வுசெய்தார்.

பள்ளி வளாகத்தில் அனைத்து ஆசிரியர்களுடன் சேர்ந்து மகிழம் மரக்கன்றை மாவட்ட ஆட்சியர் நட்டுவைத்தார். மாவட்ட ஆட்சியரை கௌரவிக்கும் பொருட்டு பள்ளி ஆசிரியர் லலிதா சால்வை அணிவித்தார். பள்ளி தலைமையாசிரியர் மகேஷ் நினைவுப் பரிசு வழங்கி நன்றி தெரிவித்தார்.

# திருக்கடையூர் கோவிலில் டி.டி.வி.தினகரன் குடும்பத்தினருடன் உக்கிர ரத சாந்தி பூஜை, வழிபாடு



திருக்கடையூர்,நவ.24-

திருக்கடையூர் கோவிலில் அ.ம.மு.க., பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் உக்கிர ரத சாந்தி பூஜைகள் செய்து சுவாமி அம்பாளை வழிபட்டார்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா திருக்கடையூரில் தேவாரப் பாடல் பெற்ற அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான இத்தலத்தில் மார்க்கண்டேயருக்காக சுவாமி, கால சம்ஹார மூர்த்தியாக எழுந்தருளி எமனை வதம் செய்ததால் அட்ட வீரட்ட தலங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது.

இத்தலத்தில் ஆயுள் ஹோமம் மற்றும் 60 வயது தொடங்குபவர்கள் உக்கிர ரத சாந்தி, 60 வயதில் பூர்த்தி அடைந்தவர்கள் சஷ்டியப்த பூர்த்தி, 70 வயதில் பீமரத சாந்தி, 80 வயது பூர்த்தி அடைந்தவர்கள் சதாபிஷேகம், 90 வயது அடைந்தவர்கள் கனகாபிஷேகம், 100 வயது பூர்த்தி அடைந்தவர்கள் பூர்ணாபிஷேகம் செய்து சுவாமி அம்பாளை வழிபட்டால் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்பது ஐதீகம்.

சிறப்பு பெற்ற திருக்கடையூர் கோவிலுக்கு 60 வயது தொடங்கியதை முன்னிட்டு அ.ம.மு.க., பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், அவரது மனைவி அனுராதா, மகள் ஜெயஹரனியுடன் வந்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் கோபூஜை, கஜ பூஜை செய்த பின்னர் நூற்றுக்கால் மண்டபத்தில் 64 கலசங்கள் அமைக்கப்பட்டு, உக்கர ரத சாந்தி ஹோமம் மற்றும் பூஜைகள் செய்தார். தொடர்ந்து தினகரன் அவரது மனைவி அனுராதாவுக்கும் கலசபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. பின்னர் தம்பதியர் இருவரும் மாலை மாற்றிக்கொண்டனர்.

அதை அடுத்து தினகரன் குடும்பத்தினருடன் அமிர்தகடேஸ்வரர், கால சம்ஹார மூர்த்தி, அபிராமி அம்மன் சன்னதிகளுக்கு சென்று வழிபாடு நடத்தினார். நிகழ்ச்சியில் உதவியாளர் ஜனார்த்தனம், அ.ம.மு.க., மாவட்ட செயலாளர் பாரிவள்ளல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பூஜைகளை கணேஷ் குருக்கள் தலைமையிலான 15 சிவாச்சாரியார்கள் செய்து வைத்தனர்.

தொடர்ந்து தினகரன் தனது குடும்பத்தினருடன் மயிலாடுதுறை அருகே உள்ள தருமபுரம் ஆதீனதிருமடத்திற்கு குடும்பத்துடன் சென்று தருமபுரம் ஆதீனம் 27ஆவது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளிடம் ஆசி பெற்றார்.

# வேளாண் கல்லூரி மாணவ, மாணவியருக்கு காரைக்காலில் இயற்கை விவசாயி பயிற்சி





காரைக்கால்,நவ,24

காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 4ம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் 40 மாணவ, மாணவியர் ஊரக, விவசாய மற்றும் வேளாண் தொழில் பணி அனுபவ பயிற்சியின் ஒரு அங்கமாக கல்லூரி இணை பேராசிரியர் ஆனந்த்குமார் தலைமையில் 500க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்களை பயிரிட்டு பராமரித்து பாதுகாத்து சாதனை செய்த வடக்கு வரிச்சிக்குடி கிராம இயற்கை விவசாயி பாஸ்கர் வயலுக்கு சென்று பயிற்சி பெற்றனர்.

அப்போது இயற்கை விவசாயி பாஸ்கர் மாணவ, மாணவியருக்கு மரபு ரகங்களின் பிரத்தியேக மாறுபட்ட பண்புகள், சிறப்பு அம்சங்கள், வேறுபாடுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து கூறினார். கருப்புக்கவுனி, மாப்பிள்ளை சம்பா, பூங்கார், கருங்குறுவை, பால்குடை வாழை, ஒட்டடையான், காட்டுயானம் போன்றவற்றை விளக்கினார்.

ஒவ்வொரு பாரம்பரிய நெல் ரகங்களுக்கும் ஒவ்வொரு குணமுள்ளது. ஆகையால் பாரம்பரிய நெல் ரகங்களை சாப்பிட வேண்டும். அதன் மூலம் "உணவே மருந்து மற்றும் மருந்தே உணவு" என்பது வாழ்வியலாக மாறும் என்றார். கடந்த ஆண்டு கருப்புக்கவுனி ரகம் மிக பிரபலமாக பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு சீரக சம்பா மற்றும் தூயமல்லி பிரபலமாக பயிரிடப்பட்டன. பாரம்பரிய நெல் ரகங்களின் மகசூல் குறித்து எடுத்துரைத்தார். 6 பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் சில முக்கிய தானியங்களை பயன்படுத்தி மதிப்புக்கூடல் செய்து தயாரிக்கும் சத்துமாவின் மருத்துவ குணங்கள் குறித்தும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் இணை பேராசிரியர் ஆனந்தகுமார் தலைமை வகித்து பேசுகையில். காரைக்கால் மாவட்டம்மட்டுமல்ல புதுச்சேரி மாநிலத்திற்கும் பெருமை சேர்த்த பாஸ்கர் பண்ணை ஒரு 'பல்லுயிர் பாதுகாப்பு மரபணு வங்கி'. உணவு, நுண்ணூட்டம், மற்றம் விதை பாதுகாப்பை உறுதி செய்து நாடு தன்னிறைவு பெற ஏதுவாக வளர்ச்சியில் தனது பங்களிப்பை நிலைநாட்டி உள்ளார், என்றார்.

மாணவர்கள் அனைவரும் பல்வேறு பாரம்பரிய நெல் ரகங்களை நேரில் கண்டு அறிந்தனர். அடுத்ததாக மாணவ மாணவியர் தங்களது சந்தேகங்களை விவசாயி பாஸ்கரிடம் கேட்டறிந்தனர். முன்னதாக மாணவி அபிநயா வரவேற்றார். மாணவி ஸ்ரீதாரணி நன்றி தெரிவித்தார்.

களப்பணிக்கான ஏற்பாடுகளை மாணவர் முஹம்மது ஃபர்ஹானுதீன் மற்றும் மாணவிகள் அபர்ணா, மாலினி செய்திருந்தனர். மாணவர்கள் கிறிஸ்டோபர், திரவியம், மாணவி கிருத்திகா இந்நிகழ்ச்சியை ஆவணமாக்கினர்.

# ஏகனிவயல் பள்ளி மாணவர்களுக்கு பால், பிரட் முட்டை வழங்கிய விஜய் மக்கள் இயக்கத்தினர்



அறந்தாங்கி, நவ.24-

விஜய் பிறந்தநாளை முன்னிட்டு அறந்தாங்கி அருகே ஏகனிவயலில் உள்ள தூய மரியன்னை அரசு உதவிபெறும் பள்ளியில் மாணவர்களுக்கு பால், பிரட், முட்டையை விஜய் மக்கள் இயக்கத்தினர் வழங்கினர்.

விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விஜய் மக்கள் இயக்கத்தினர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகின்றனர். குறிப்பாக, கஜா புயல் தாக்குதல், கொரோனா வைரஸ் பாதிப்பு ஆகிய காலங்களில் மக்களை தேடி பல்வேறு உதவிகளை செய்து வந்தனர்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே ஏகனிவயல் கிராமத்தில் உள்ள தூயமரியன்னை அரசு உதவி பெறும் பள்ளியில் உள்ள தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு பால், பிரட், முட்டை உள்ளிட்ட உணவு பொருட்களை புதுக்கோட்டை மாவட்ட தலைவரும், புதுக்கோட்டை பெருநகர் மன்ற உறுப்பினருமான பர்வேஸ் அறிவுறுத்தலின்படி அறந்தாங்கி ஒன்றிய இளைஞரணி தலைவர் ஆண்ட்ரூஸ் தலைமையில் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், நகர இளைஞரணி செயலாளர் அருண், ராஜேஷ் உள்ளிட்ட விஜய் மக்கள் இயக்கத்தினர் பங்கேற்றனர்.

# ஆலங்குடி அருகே காவல்நிலையம் முற்றுகை கொம்புக்கார சுவாமி கோயில் விழா விஸ்வரூபம்!



ஆலங்குடி, நவ. 24 -

ஆலங்குடி அருகேயுள்ள கீரமங்கலம் பட்டவையா கொம்புக்கார சுவாமி கோயில் கடந்த செப்டம்பர் 5ம் தேதி கும்பாபிஷேகம் நடந்தது. இந்நிலையில், இந்த கும்பாபிஷேகத்தில், பெரிய தாணன், சின்ன தாணன், சிவந்தான், ஏகன் ஆகிய நான்கு கரைகாரர்களும் சேர்ந்து கும்பாபிஷேகத்தை நடத்தியுள்ளனர்.

ஆனால், 48 நாட்கள் நடைபெற்ற அபிஷேக ஆராதனை விழாக்களில், சிவந்தான், ஏகன் ஆகிய இரு கரைகாரர்களை அபிஷேக ஆராதனைக்கு அழைக்காததால் கலந்துகொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், சிவந்தான், ஏகன் ஆகிய இரு கரைகாரர்கள் நேற்று பால்குடம் மற்றும் அபிஷேக ஆராதனைகள் நடத்த திட்டமிட்டுருந்தனர். இதனால், இருதரப்பினர் இடையே பிரச்சனை ஏற்படும் சூழல் உருவானது.

இதைத்தொடர்ந்து, தாசில்தார் செந்தில் நாயகி தலைமையில், போலீஸ் டி.எஸ்.பி., தீபக் ரஜினி முன்னிலையில் தாலுகா அலுவலகத்தில் அமைதி பேச்சு வார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாதால், பால்குடம் எடுக்க அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், அப்பகுதியில் அசம்பாவித சம்பவம் ஏற்படாததால், போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து, சிவந்தான், ஏகன் ஆகிய இரு கரைகாரர்கள் நேற்று கீரமங்கலம் பஸ் ஸ்டாண்டிலிருந்து ஊர்வலமாகச் சென்று கீரமங்கலம்காவல்நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதைத் தொடர்ந்து, ஆர்.டி.ஓ., தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தக்கோரி, போலீஸ் இன்ஸ்பெக்டர் பாஸ்கரனிடம் மனு அளித்து விட்டு கலைந்து சென்றனர். இருப்பினும் ஆர்.டி.ஓ., பேச்சுவார்த்தை நடத்தினால் இதற்கு முடிவு வரும் என்ற நிலை நீடிப்பதால், அப்பகுதியில் தொடர்ந்து போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் பதட்டம் நிலவி வருகிறது.

# ஆர்.எஸ்.எஸ்., ஊர்வலத்திற்கு அனுமதி வேண்டும் சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீட்டு மனுத்தாக்கல்



சென்னை, நவ.24-

தமிழகத்தில் ஊர்வலம் நடத்த அனுமதி கோரி ஆர்.எஸ்.எஸ்., அமைப்பு சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

காந்தி ஜெயந்தி அன்று தமிழகத்தின் 50 இடங்களில் ஊர்வலம் நடத்த அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், ஊர்வலம் நடத்த அனுமதி அளித்தது. சட்டம் - ஒழுங்கு சூழலை காட்டி ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து ஆர்.எஸ்.எஸ்., தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், 6 இடங்களை தவிர்த்து மீதமுள்ள 44 இடங்களில் உள் அரங்க நிகழ்வாக ஊர்வலம் நடத்திக்கொள்ள ஆர்.எஸ்.எஸ்., அமைப்புக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ்., அமைப்பு சார்பில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், "ஆர்.எஸ்.எஸ்., ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கி செப்டம்பர் 9ம் தேதி பிறப்பித்த உத்தரவை உறுதி செய்ய வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ்., ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட காலத்தில் மற்ற அரசியல் கட்சியினரின் போராட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அம்சங்களை கருத்தில் கொள்ளாமல், தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளது" என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திருச்சானூரில் கார்த்திகை பிரம்மோற்சவ விழா பத்மாவதி தாயார் சிம்ம வாகனத்தில் வீதி உலா!



திருச்சானூர், நவ.24-

திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவிலில் வருடாந்திர கார்த்திகை பிரம்மோற்சவ விழா நடந்து வருகிறது. விழாவின் மூன்றாவது நாளான செவ்வாய்க்கிழமை காலை முத்துப்பந்தல் வாகனத்தில் பத்மாவதி தாயார் பகாசுரவத அலங்காரத்தில் எழுந்தருளி மங்கள வாத்தியங்கள் முழங்க நான்கு மாட வீதிகளில் உலாவந்து பக்தர்களுக்கு ஸேவை சாதித்தார்.

காலை 8 மணி முதல் 10 மணி வரை நடந்த இந்த வீதி உலாவின் போது பக்தர்கள் ஆரத்தி எடுத்து வழிபட்டனர். வாகன வீதி உலாவின் முன்பாக பெண்கள் நடனம், கோலாட்டம் மற்றும் பஜனை நிகழ்த்தியபடி சென்றனர். சித்தூர் மாவட்டம் நிம்மனப்பள்ளியை சேர்ந்த வெங்கடரமண பஜனை குழுவினர் கிராமிய பாரம்பரிய பில்லனகுரோவி பஜனைகள் நடத்தினர். இதேபோல், ராஜமுந்திரியை சேர்ந்த சிவகேசவ கோலாட்ட பஜனை மண்டலி கலைஞர்களின் பாரம்பரிய நடனம், திருப்பதி சதானந்த நிலைய வாச பஜனை கலைஞர்கள், திருப்பதியை சேர்ந்த வைபவ வெங்கடேஸ்வரா கோலாட்ட குழுவினரின் கோலாட்டம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மதியம் 12.30 மணி முதல் 2.30 மணி வரை கிருஷ்ணசுவாமி மண்டபத்தில் தாயாருக்கு திருமஞ்சனம் நடந்தது. மஞ்சள், சந்தனம், பால், தயிர், தேன், இளநீர், சந்தனம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்யப்பட்டது. மாலை 5.30 மணி முதல் 6 மணி வரை ஊஞ்சல்சேவை நடைபெற்றது. இரவு 7 மணி முதல் 9 மணி வரை சிம்ம வாகனத்தில் பத்மாவதி தாயார் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஸேவை சாதித்தார்.






புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், பல்லவராயன்பத்தை கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சி நேற்று நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர் பொறுப்பேற்பு



அரியலூர், நவ.24-

செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலராக விஸ்வநாதன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றிய விஸ்வநாதன் பணியிட மாற்றம் செய்யப்பட்டு, செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், வட்டார வளர்ச்சி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய வட்டார வளர்ச்சி அலுவலர் விஸ்வநாதனுக்கு, அலுவலக நிர்வாகிகள் பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

# ஆலங்குடி அருகே பெண்ணிடம் செயின் பறிப்பு

*ஆலங்குடி, நவ. 24 -*

*ஆலங்குடி அருகே உள்ள வேங்கிடகுளத்தைச் சேர்ந்தவர் பிரபாகரன். இவரதுமனைவிசுமித்ரா (23). இவர், தனது கணவரோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக காடையன்தோப்பில் உள்ள அவரது தந்தை ராமலிங்கம்வீட்டில்வசித்து வந்துள்ளார்.*

*இந்நிலையில், வீட்டில் தனது தாய் ஜெயலட்சுமி, சகோதரி சுமதி ஆகியோருடன் நேற்று முன்தினம் இரவு தூங்கியுள்ளார். அப்போது, இவரது வீட்டிற்குள் நுழைந்த மர்ம நபர்கள் சுமித்ரா கழுத்தில் அணிந்திருந்த ஆறரை பவுன் தாலிச் செயினை திருடிச் சென்றனர்.*

*இதுகுறித்து, ஆலங்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.*

# விராலிமலையில் இருசக்கர வாகனத்தில் ரூ.1.14 லட்சம் திருடிய மர்மநபர்கள்

*விராலிமலை, நவ.24-*

*புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை கடைவீதியில் இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் ரொக்க பணம் திருட்டு போனது குறிதது போலீஸார் விசாரிக்கின்றனர்.*

*விராலிமலை மாதிரிபட்டியைச் சேர்ந்தவர் அஞ்சலி வயது 35. இவர் விராலிமலை கடைவீதியில் உள்ள தனியார் நகைக்கடை அருகே இருசக்கர வாகனத்தைநிறுத்திவிட்டு பொருட்களை வாங்கச் சென்றுள்ளார்*

*பொருட்களை வாங்கிவிட்டு மீண்டும் வாகனம் அருகே சென்றபோது வாகனம் உடைக்கப்பட்டு அதிலிருந்து ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் ரொக்க பணம் திருடுபோய் உள்ளதைக் கண்டு பதறினார்.*

*இந்த திருட்டு குறித்து பணத்தை பறி கொடுத்த அஞ்சலி விராலிமலை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரை பெற்றவிராலிமலைகாவல் நிலைய அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து ரொக்க பணத்தை திருடிச்சென்ற மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.*

# தென்காசியில் நாளை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்: ஆட்சியர் தகவல்



தென்காசி நவ.24-

தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை 25ம் தேதி காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெற இருக்கிறது. இம்முகாமில் பல்வேறு தனியார் துறை முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

இம்முகாமில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்ட படிப்பு மற்றும் ஐ.டி.ஐ., டிப்ளமோ ஆகிய கல்வித்தகுதி உடைய தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த வேலைநாடு நபர்கள் முகாமில் பங்கேற்று பயனடையலாம். முகாமில் பங்கேற்க விரும்பும் தனியார் துறை நிறுவனங்கள் தென்காசி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது deotksjob-fair@ gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி வாயிலாக மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க.,வை வீழ்த்தும் கூட்டணியில் அ.ம.மு.க., பொதுச்செயலாளர் டி.டி.டி.வி.தினகரன் அதிரடி!



மயிலாடுதுறை, நவ.24-

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் கோவிலில் டி.டி.வி.தினகரன் உக்கிர ரத சாந்தி பூஜை, வழிபாடுக்கு பின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அ.தி.மு.க, கட்சி செயல்படாத நிலையில் உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி செய்த தவறால் சின்னம் இல்லாமல், கட்சி இல்லாமல் தற்போது நீதிமன்றத்தில் போராட்டம் நடத்தி வருகிறார். அ.தி.மு.க., கட்சி பற்றி பேசுவது தேவையற்றது. தேர்தல் சமயத்தில் பேசிக்கொள்ளலாம். சசிகலா வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. அது பற்றி எனக்கு தெரியாது. டிசம்பர் மாத கடைசியில் கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும். மத்தியில் பிரதம வேட்பாளர் யார்? என்று சொல்லுகின்ற கூட்டணி அமைக்கப்படும்.

தி.மு.க., ஒன்றரை ஆண்டு ஆட்சியில் மக்களிடம் வருத்தத்தை சம்பாதித்துள்ளது. அதை சரி செய்து கொள்ளவில்லை என்றால் மோசமான நிலையை சந்திப்பார்கள் வருகின்ற தேர்தலில் தி.மு.க.,வை வீழ்த்தும் கூட்டணியில் அ.ம.மு.க., இருக்கும். மழை வெள்ள பாதிப்பால் நிவாரணம் கிடைக்காமல் மக்கள் போராட்டம் நடத்துவது. தி.மு.க., விடியல் ஆட்சியின் அவலங்கள் மக்களை ஏமாற்றும் ஆட்சியாக உள்ளது.

அ.தி.மு.க., ஆட்சியில் 11 மருத்துவக் கல்லூரி கட்டியதில் ஊழல் இருப்பதற்கான முகாந்திரம் உள்ளதாக தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது. அ.தி.மு.க., ஆட்சியில் பல துறைகளில் முறைகேடு நடைபெற்றதால் தான் தி.மு.க.,விற்கு மக்கள் வாய்ப்பளித்துள்ளனர். எந்த ஊழலாக இருந்தாலும் கத்திரிக்காய் முத்தினால் சந்தைக்கு வந்து தான் தீர வேண்டும். மயிலாடுதுறை மாவட்டத்தை பேரிடர் பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் குறைந்தது ரூ.3,000 வழங்க வேண்டும்.

நியாயமான கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் அதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டும். தமிழக முதல்வர் ஸ்டாலினின் ஆளுமை கேள்விக்குறியாக உள்ளதால் தான் அமைச்சர்கள் இடையே சண்டை ஏற்படுகிறது. இதுவும் திராவிட மாடல் ஆட்சிக்கு ஓர் உதாரணம். இவ்வாறு டி.டி.வி.தினகரன் தெரிவித்தார்.

# கறம்பக்குடியில் பள்ளத்தில் விழுந்த பசுமாடு பள்ளங்களை மூட பொதுமக்கள் கோரிக்கை



கறம்பக்குடி,நவ.24-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி சீனிக்கடை முக்கம் அருகே குடிநீருக்காக குழி தோண்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அந்த குழியில் சாலையில் சுற்றித்திரிந்த மாடு ஒன்று தவறி விழுந்துள்ளது. இதையடுத்து அப்பகுதியினர் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

தகவலை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற கறம்பக்குடி தீயணைப்புத் துறை வீரர்கள் குடிநீருக்காக தோண்டப்பட்ட குழியில் விழுந்து வெளியே வர முடியாமல் தவித்த மாட்டை கயிறு கட்டி பத்திரமாக மீட்டு வெளியே கொண்டு வந்தனர். மகிழ்ச்சியில் மாடு துள்ளி குதித்து ஓடியது.

கறம்பக்குடி பேரூராட்சி பகுதியில் குடிநீருக்காக தோண்டபட்ட பள்ளங்கள் அதிகமாக இருக்கிறது. இது போன்ற மற்றொரு சம்பவம் அரங்கேறாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழிகளை மூட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விராலிமலை பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு வாலிபர் சொந்த செலவில் நீர் வழங்கல்



விராலிமலை, நவ.24-

விராலிமலை பகுதியில் 20 நாட்களுக்கு மேலாக தண்ணீர் வராததால் இளைஞர் ஒருவர் தனது சொந்த செலவில் மக்களுக்கு தண்ணீர் வழங்கினார்.


புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை ஊராட்சியைச் சேர்ந்த ஐயப்பா நகர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 20 நாட்களுக்கு மேலாக குடிநீர் வராததால் மக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாகினர்.

இதையறிந்த ஐயப்பன் நகரை சேர்ந்த ரவிச்சந்திரன் என்ற இளைஞர் தனது சொந்த செலவில் மக்களுக்கு குடிநீர் வழங்கினார். மேலும். டேங்கர் லாரி மூலம் 7 ஆயிரம் லிட்டர் தண்ணீரை இலவசமாக வழங்கினார்

குடிநீர் பிரச்சனையை ஊராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளாத நிலையில், இளைஞர் ஒருவர் தனது பகுதி மக்களுக்கு தானே முன் வந்து உதவியதால் அந்தப் பகுதி மக்கள் வரை வெகுவாக பாராட்டி வருகின்றனர்.




# துருக்கியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.1 ஆக பதிவு: 22 பேர் படுகாயம்



அங்காரா, நவ.24-

துருக்கியின் வட மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை கடுமையான நிலநடுக்கம் நேரிட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகி உள்ள இந்த நிலநடுக்கம் காரணமாக 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துருக்கியின் வடமேற்குப் பகுதியில் டவுசி மாகாணத்தில் உள்ள கோல்கயா என்ற நகரத்தை மையமாகக் கொண்டு உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4.08 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகி உள்ளது.

பூமிக்கு கீழே 10 கிலோ மீட்டர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கட்டடங்கள் குலுங்கி உள்ளன. பொருட்கள் கீழே விழுந்து உடைந்துள்ளன. இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளைவிட்டு அவசர, அவசரமாக வெளியேறி உள்ளனர். இதில், படுகாயம் அடைந்த 22 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் சுலேமான் சோயிலு தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கத்தை அடுத்து டவுசி மாகாண பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மின்சாரமும் துண்டிக்கப் பட்டுள்ளது. உயிரிழப்புகள் குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை. நிலநடுக்கத்தை அடுத்து 35 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதும் பதிவாகி உள்ளது. இதனால், மக்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் மேற்கு வடமேற்கு திசையில் 186 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தலைநகர் அங்காராவிலும், 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இஸ்தான்புல் நகரிலும் எதிரொலித்துள்ளது. அங்குள்ள தொலைக்காட்சி நிலையங்களில் கட்டடம் ஆடுவது வீடியோவாக பதிவாகி உள்ளது.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# கடந்த ஆட்சியில் ஊழல்! ரூ.1,000 கோடி: செல்வப்பெருந்தகை

# அணுமின் நிலையத்தில் பழுது 1000 மெகாவாட் பாதிப்பு!





# அனைத்து துறைகளிலும் லஞ்சம்! எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு


சென்னை / புதுக்கோட்டை | 24.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மான்டெக் சிங் அலுவாலியா , இந்தியப் பொருளியலாளர், ஆட்சிப் பணி அதிகாரி (பி.1943)



இயன் போத்தம் , ஆங்கிலேயத் துடுப்பாளர் (பி.1955)



அருந்ததி ராய் , இந்திய எழுத்தாளர் (பி.1961)



அனுர குமார திசாநாயக்க , இலங்கை அரசியல்வாதி (பி.1968)



## இன்றைய நினைவு நாள்

வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் , தமிழக இந்தியவியலாளர் (பி.1896) (இ.1953)



ஏ. எம். ஏ. அசீஸ் , இலங்கை கல்வியாளர், அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1911) (இ.1973)



தனுஷ்கோடி ராமசாமி , தமிழக எழுத்தாளர் (பி.1945) (இ.2005)

